**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## <u>அவசரக் கூட்டப்பொருள்</u>

2014ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் நாள் திங்கள்கிழமை மாலை 03.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(2)ன்கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## <u>பொருள்கள்</u>

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 25.8.14 | | 93) தமிழகம் மற்றும் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தூத்துக்குடி மாநகராட்சி வளர்ச்சிக்கு வல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி உள்ளார்கள். அதில் ஒன்றுதான் தூத்துக்குடி மாநகராட்சி மக்களின் குடிநீர் பிரச்சனையினை தீர்க்கும் 4வது பைப் லைன் குடிநீர் திட்டம் இப்போது |

| | | |
|---|---|---|
| | | மீண்டும் தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள ஊராட்சி பகுதிகளான அத்திமரப்பட்டி, மீளவிட்டான் முத்தையாபுரம் சஙகரப்பேரி மற்றும் தூத்துக்குடி ரூரல் ஆகியவற்றின் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் விதமாக பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மற்றும் சாலைகள் அமைக்கும் பணிக்காக ரூ 320 கோடி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் தனது தன்றியினை தெரிவித்துக் கொள்கிறது. |
| | **1.**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டம் **2023**இன்படியும் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை படியும் திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதி மாநிலத்தில் மண்டல அளவில் பல்வேறு இடங்களில் திடக்கழிவுகளை கையாளுவதற்கு பொதுவான மையம் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.<br>அதன்பேரில் தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் காயல்பட்டினம், கோவில்பட்டி நகராட்சிகளை இணைத்து மண்டல அளவில் திடக்கழிவுகளை கூட்டாக செயல்முறைப்படுத்தி மற்றும் ஒழித்துக்கட்டுதல் (MSW processing and disposal facilities on a cluster basis) திட்டத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் கலந்தாலோசகர் மெசர்ஸ். இன்ப்ராஇன்(இந்தியா) பிரைவேட் லிமிட் பெங்களூரு நிறுவனம் மூலம் ரூ **94.88** கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் தூத்துக்குடி மாநகராட்சியும், பொது மற்றும் தனியார் நிறுவன பங்களிப்புடன் ( Public private partnership) மேற்கண்ட திட்டம் செயல்படுத்த மதிப்பீட்டு தொகை ரூ **80.84** கோடி அளவில் திட்ட மதிப்பிடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கலாம்.<br><br>மேற்கண்ட திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத்தொகையான ரூ **94.88** கோடியில் **75** சதவீத தொகையான ரூ. **71.16** கோடி நிதியினை திடக்கழிவு மேலாண்மை நிதி அல்லது | **94)**அலுவலக குறிப்பு **1** (ம) **2** அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சி வாரியம் (TNIDB) மூலம் மான்யமாகவும், மீதமுள்ள 25 சதவீத தொகையான ரூ 23.72 கோடி நிதியினை பொது மற்றும் தனியார் பங்களிப்பு ( PPP) மற்றும் மாநகராட்சி பங்களிப்புடன் பெற்று செயல்படுத்த மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1.மாமன்றம் ரூ 94.88கோடி திட்ட மதிப்பீட்டு தொகை கருத்துருவிற்கு ஒப்புதல் வழங்கலாம்<br><br>2.இத்திட்டத்தை செயல்படுத்த உரிய நிதி ஒதுக்கீட்டினை மான்யமாக பெறுவதற்கு உரிய கருத்துரு மற்றும் முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் மூலம் அரசுக்கு அனுப்ப மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/8324/2014 | |
| | 2.தூத்துக்குடி மாநகராட்சி, வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு வரும் முதலாவது குழாய், வல்லநாடு வாய்க்கால் கீழ்புறம் அதன் மட்டத்திலிருந்து விலகி தண்ணீர் வீணாகி நகருக்கு வரும் குடிநீர் அளவு குறைந்து வருவதின் காரணமாக மேற்படி பகுதியில் புதிய குழாய் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்ய மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ. 1,27,670/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 09/14–15 | 95)பதிவு செய்யப் பட்டது. |
| | 3) இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள லெவிஞ்சிபுரம் மாநகராட்சி நடுநிலை பள்ளியில் கிழக்கு பக்கம் உள்ள பழைய கட்டிடம் மிகவும் சேதமடைந்து கூரை இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே இந்த கட்டிடத்தில் பள்ளி குழந்தைகள் அமர்ந்து பாடம் படிக்கும் நிலையில் இல்லை. எனவே மேற்படி பழுதுபட்டுள்ள கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக கட்டிடம் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 3950000/– (ரூபாய் முப்பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – கல்வி நிதியின் கீழ் செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ம,ப,எண்.54/14–15 | 96)அலுவலக குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது. |
| | 4)இம்மாநகராட்சி, வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகருக்கு குடிநீர் பம்பிங் செய்யப்படும் முதலாவது பம்பிங் மெயினில் கலியாவூர் சாலையின் கீழ் பகுதியில் மூன்று இடங்களில் உடைப்பு எற்பட்டு நகரின் குடிநீர் விநியோகம் பாதிப்படைந்ததையொட்டி மேற்படி உடைப்பை சீரமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ. 154571/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். பீடு எண். 31 A/14–15 | 97)பதிவு செய்யப்–பட்டது |
| | 5) இம்மாநகராட்சி பகுதி வார்டு எண்.5ல் ஆர்.எஸ்.பி.ஆர். நகர் (ஹவுசிங் போர்டு காலனி) பகுதியில் உள்ள பயன்பாட்டில் இல்லாத இடிந்துபோன பழைய தரைமட்ட தொட்டி மற்றும் மேல்நிலை நீர் தேக்க தொட்டி பழுதாகி மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதால் இடித்து | 98)அலுவலகக் குறிப்பு படிஅங்கீ கரிக்கப் |

| | | |
|---|---|---|
| | அப்புறப்படுத்தி நான்காவது பைப்லைன் திட்டத்தில் புதியதாக மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு செலவு செய்ய உள்ள தொகை ரூ.645000/–க்கு (ரூபாய் ஆறு இலட்சத்து நாற்பத்தைந்து ஆயிரம்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்க்கண்ட கட்டிடத்தை இடிக்க நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.<br>ம,ப,எண், 10/14–15 | பட்டது. |
| | 6)தூத்துக்குடி மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் வாகன துலக்குநராக பணிபுரிந்து வரும் திரு.கே. முனியசாமி என்பவர் மாற்றுத்திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்கக் கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்கள்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169(H)(C ) ன் படியும் அரசு ஆணை TAMILNADU GOVERNMENT GAZETTE 15/06/1992 Part IV Section – 2 Serial No.30 ன் படியும் திரு.கே. முனியசாமி என்பவருக்கு 2014–2015ம் முதலாம் அரையாண்டு முதல் தொழில்வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். அ15/006895/14 | 99)அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது |
| | 7) தற்பொழுது வர உள்ள பருவமழை காலத்தை முன்னிட்டும் இம்மாநகராட்சி பகுதிகளில் பொது மக்கள் கூடும் இடங்கள் பேருந்து நிலையங்கள், பொது கழிப்பிடங்கள் அலுவலக கழிப்பிடங்கள் மழைநீர் மற்றும் குப்பைகளை அகற்றிய பின் அந்த இடங்களை சுத்தம் செய்யவும் தொற்று நோய்கள் பரவாத வண்ணம் பராமரிப்பதும் மிகவும் அத்தியாவசியமானதாகும். எனவே மேற்படி பணிகளுக்கு தேவையான பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள், கருப்பு பினாயில் மற்றும் வாசனை பினாயில் போன்ற கிருமி நாசினிகளை அவசர அவசியம் கருதி வாங்கி பயன்படுத்திக்கொள்ளவும் அதற்கு ஆகும் செலவுத்தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** –அனுமதிக்கலாம். எச்4/4792/2014 | 100) அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | 8) தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள வார்டு எண். 17 தூத்துக்குடி ரூரல் பஞ்சாயத்தில் உள்ள விடுபட்ட குடிசைபகுதிகள் மற்றும் வார்டு எண். 44ல் விடுபட்டுள்ள குடிசை பகுதிகளின் விபரங்கள் கீழ்க்கண்டவாறு சம்பந்தப்பட்ட மாமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதன் விபரத்தை தெரிவித்து தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் திருநெல்வேலி கோட்டம் அவர்கள் கணக்கெடுப்பு நடத்த பிரேரணைகள் அனுப்பலாம்.<br><br>விடுபட்ட பகுதிகள்<br><br>வார்டு எண். — தெருவின் பெயர்<br>17 — பொன் சுப்பையா நகர் தஸ்நேவிஸ் நகர் செயின்ட்மேரிஸ் காலனி | 101) அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 44 | போல்டன்புரம் 1,2,3,4,<br>சுப்பையாமுதலியார்புரம் 1,2,3,4,5<br>மாசிலாமணிபுரம் 1, 2,3 |

மேற்கண்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினரால் கணக்கெடுப்பு பணி செய்ய மன்ற அனுமதி பெற்று தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – வார்டுகள் 17 மற்றும் 44ல் உள்ள குடிசைகள் பற்றிய விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் சமர்ப்பிக்கப்பட்டு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 6667/2010/எச்1

---

9) இம்மாநகராட்சியில் சமுதாய அமைப்பாளராக பணிபுரியும் திரு. தேவசகாயம் அருணி என்பவர் இம்மாநகராட்சியில் 25.7.2011 முதல் பணிபுரிந்து வருகிறார். அன்னார் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக சென்னை மாநகராட்சிக்கு பணிமாறுதல் கேட்டு விண்ணப்பித்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தினை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.சி1/7467/2014

102) அலுவலக குறிப்புப்படி அனுமதி வழஙகப் பட்டது

---

10) இம்மாநகராட்சிக்கு சொந்தமான பொருள் வைப்பு கிடங்கில் நீண்டகாலமாக கீழ்க்கண்ட பொருள்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாலும் போதிய இடவசதி இல்லாததாலும் அதனை ஏலம் விட்டு அப்புறப்படுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பொருள்களின் விபரம் | தோராயமான இருப்பு விபரம் |
|---|---|---|
| 1 | பயன்படுத்த முடியாத டயர்கள் | (74 எண்ணங்கள்) |
| 2 | பயன்படுத்த முடியாத மரம் மற்றும் மரசாமான்கள் | (100 கிலோகிராம்) |
| 3 | பயன்படுத்த முடியாத டியூப் லைட்கள் | (300 எண்ணங்கள்) |
| 4 | பயன்படுத்த முடியாத சிறுவர்களுக்கான இரும்பு விளையாட்டு சாமான்கள் (பூங்காவில் இருந்தவை) | இரண்டு எண்ணங்கள் |
| 5 | பயன்படுத்த முடியாத இரும்பு சாமான்கள் | டேபிள் ஒன்று , கட்டில் ஒன்று |

**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம். இ6/7368/14

103)அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது.

---

11)தூத்துக்குடி மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு 6ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.எம். பேச்சிமுத்து என்பவர் மாற்றுத்திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்கக் கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்கள்.

தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169(H)(C ) ன் படியும் அரசு ஆணை TAMILNADU GOVERNMENT GAZETTE 15/06/1992 Part IV Section – 2 Serial No.30 ன் படியும் திரு. எம். பேச்சிமுத்து என்பவருக்கு 2014–2015ம் முதலாம் அரையாண்டு முதல் தொழில்வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

104)அலுவலகக்குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். அ15/007433/14 | |
| | 12)சமூக பாதுகாப்புத் திட்டம் தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் வசித்து வரும் முதியோர், விதவைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியவர்களுக்கு உதவித் தொகை வழங்குவது தொடர்பாக பயணீட்டாளர்களின் பெயர்களை இணைப்பில் கண்டுள்ளபடி முதியோர் மற்றும் விதவை உதவித் தொகைகளுக்கு பெயர் சேர்ப்பது தொடர்பாக மாமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்துள்ளார்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தூத்துக்குடி அவர்களின் கடித எண் ஜி3/7443/2012 நாள் 4.4.2013 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதின் பிரகாரம், மாநகராட்சி சமுதாய அமைப்பாளர்கள் சம்பந்தப்பட்டவர்களின் முகவரியில் நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வில் முன்னுரிமையின் தன்மை குறியீடு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நபர்களை உதவித்தொகை பட்டியலில் பெயர் சேர்க்கலாம். மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 105)<br>அலுவலக குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது |

| வ.. எண் | வார்டு/ பகுதி / கோட்டம் எண்.. | தெரு பெயர்/ குடிசை பகுதி / சிற்றூர் | கதவு எண். | குடிசை பகுதியின் அங்கீகரிக்கப்பட்டது/ அங்கீகரிக்கப்படாதது | குடும்பத் தலைவரின் பெயர்/ பெண் குடும்பத் தலைவியாயின் அடிகோடிடுக | தகப்பனார்/ கணவர் பெயர் | வறுமை கோட்டிற்கு கீழே இருப்பின் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பொருளாதாரம் சாராத அளவு கோல் மற்றும் அம்சங்கள் அடிப்படையிலான சராசரி மதிப்பெண் | முன்னுரிமை தன்மை I/II/III/IV/V |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/7 | | கமலம் (விதவை) | சிவனு | 82 | I |
| 2 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/3 | | தனபாக்கியம் | பழனிவேல் | 89 | I |
| 3 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/5 | | ஜீவரத்தினம் | கருப்பையா | 80 | I |
| 4 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/117 | | அஞ்சலை | ராசுப்பிள்ளை | 85 | I |
| 5 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/30 | | முருகையா | ராமையா | 82 | I |
| 6 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/54 | | ராமசாமி | கிருஷ்ணன் | 88 | I |
| 7 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/60 | | பெருமாள் | ராஜி | 84 | I |
| 8 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/63 | | செல்லம்மாள் | ஆறுமுகம் | 82 | I |
| 9 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/64 | | அங்காய் | பிச்சையா | 76 | II |
| 10 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/62 | | ஐயம்பெருமாள் | முனியன் | 84 | I |
| 11 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/78 | | ஜெபமாலை | அந்தோணிசாமி | 82 | I |
| 12 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/105 | | முனியம்மாள் | பெருமாள் | 82 | I |
| 13 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/76 | | சொர்ணமணி | ராமு | 82 | I |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 35 | சிலோன் காலனி சின்னமணிநகர் | 106கே/எக்ஸ்/94 | | கலிய பெருமாள் | லட்சுமணன் | 82 | I |
| 15 | 4 | போல்பேட்டை | 73/11/எ2 | | பொன்னம்மாள் | சொக்கலிங்கம் (லேட்) | 82 | I |
| 16 | 34 | டூவிபுரம் 3வது தெரு | 110/1 | | வி.சங்கரவடிவு | வெங்கடாசலம் | 82 | I |

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.19368/2010/எப்6

13)தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட குத்தகை இனங்களை 2013–2016ம் ஆண்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இனங்கள் கட்டணம் சரி வர வசூல் செய்ய முடியாததால் 2014–2015ம் ஆண்டு உரிமம் தொகை செலுத்தாமல் உரிமத்திலிருந்து விலகிக்கொள்வதாக மனு செய்ததின் பேரில் 2013–2016ம் ஆண்டிற்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் பக்கம் எண்.06, நிபந்தனை எண். 14ல் தெரிவித்துள்ளபடி உரிமம் தாரர் மாநகராட்சியுடன் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்து உரிமம் எடுத்துள்ளார். மேற்படி உரிமம்தாரரால் மூன்றாண்டுகளுக்கு முன்னதாக உரிமத்தை விட்டு சென்றாலோ, மாநகராட்சிக்கு உரிமம்தாரரால் இழப்பு ஏற்பட்டதாக மாநகராட்சி ஆணையர் கருதினாலோ சம்பந்தப்பட்ட உரிமம்தாரரின் வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகையை பறிமுதல் செய்யவும் நீதிமன்றம் மூலம் குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும் ஆணையர் மற்றும் மாமன்றத்திற்கு முழுமையான அதிகாரம் உண்டு என்ற விபரப்படி கீழ்க்கண்ட நபர்கள் செலுத்திய வைப்புத்தொகையை பறிமுதல் செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

106)அலுவலக குறிப்புப் படி அனுமதிக்கப்பட்டது

| வ.எண். | உரிமம் இனங்கள் | உரிமம்தாரர் பெயர் மற்றும் முகவரி | பறிமுதல் செய்ய வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1 | பண்டுகரை சாலையில் – 3வது ரயில்வே கேட் மேம்பாலம்– மேம்பாலம் இறக்கம் மேல் பக்க பகுதி முதல் 4ம் கேட் சிறிய பாலம் கிழக்கு பகுதி முழுவதும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம். | ஜே.ஆபிரகாம் த/பெ.ஜேசுதாசன் 8/246 ஆரோக்கியபுரம் | 300000/– |
| 2 | மாநகராட்சி வ.உ.சி. சந்தையில் ஆடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | எஸ்.ஆர். பெனில்டஸ் த/பெ. எஸ். ஆர். ராபர்ட் 25எ, பிரையண்ட்நகர் | 1,00,000/– |
| 3 | மாநகராட்சி எஸ்.எஸ்.தெரு சந்தையில் ஆடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ஜே. பெரியராஜ் த/பெ.எ. ஜெபமணி,37எ டூவிபுரம் | 1,00,000/– |

**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம் அ16/20353/2012

14)தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள வார்டு எண்.2 சங்கரப்பேரி பஞ்சாயத்தில் குடிசை பகுதி கணக்கெடுப்பில் விடுபட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட மாமன்ற உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் விபரத்தை தெரிவித்து தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருநெல்வேலி கோட்டம் அவர்களால் கணக்கெடுப்பு பணி நடத்த பிரேரணைகள்

107)அலுவலகக்குறிப்புப் படி அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td>
அனுப்பலாம்.

**விடுபட்ட பகுதிகளின் விபரம்**

**வார்டு எண். 2**

<table>
<tr><th>தெருவின் பெயர்</th><th>குடிசை வீடுகளின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>1) தேவர் காலனி</td><td>60</td></tr>
<tr><td>2) நேராஜி நகர்</td><td>30</td></tr>
<tr><td>3) விசுவபுரம்</td><td>50</td></tr>
<tr><td>4) ஐயப்பநகர்</td><td>30</td></tr>
<tr><td>5) இந்திரா நகர்</td><td>30</td></tr>
<tr><td>6) யோகிஸ்வரர் காலனி</td><td>25</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>225</td></tr>
</table>

மேற்கண்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினரால் கணக்கெடுப்பு பணி செய்ய மன்ற அனுமதி பெற்று தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – வார்டு எண். 2ல் உள்ள விடுபட்ட குடிசைகள் பற்றிய விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் சமர்ப்பிக்கப்பட்டு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.6667/2010/எச்1
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>
15)தூத்துக்குடி மாநகராட்சி, வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம், தாமிரபரணி ஆற்றுப்பகுதியில், வெள்ள பெருக்கு காரணமாக நீர் வட்ட கிணற்றுகளை சுற்றி தண்ணீர் செல்லாமல் பம்பிங் அளவு குறைந்ததின் காரணமாக, மேற்படி கிணறுகளை சுத்தம் செய்து நீர் போக்கினை கிணற்றை சுற்றி செல்லும்படி மண் தோண்டும் எந்திரம் மூலம் மாற்றியமைத்து நீர் வரத்து அதிகரிப்பதற்கும் மேற்படி கிணறுகளின் சுற்று சுவர் பழுதடைந்ததை பூசி சரி செய்து, மேல் மூடி அமைக்கவும் மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 2,48,647/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம் மதிப்பீடு எண். 15/14–15
</td>
<td>108) பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>
16)தூத்துக்குடி பத்திரிக்கையாளர் மன்றத்தின் சார்பில் தூத்துக்குடி ஜெயராஜ் சாலையில் சுந்தரம் அருள்ராஜ் மருத்துவமனைக்கு மேற்கே பத்திரிக்கையாளர் மன்ற கட்டிடம் கட்ட அரசு புறம்போக்கு நிலம் குத்தகை அடிப்படையில் வழங்க கோரி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது மாநகராட்சி பகுதிக்குட்பட்ட ஜெயராஜ் ரோடு, விவிடி. ரோடு சந்திப்பின் கிழக்குப் பகுதியில் ரோடு மூலை விட்டம் (Road splay) இடம் வார்டு 4, பிளாக் எண் 21A சர்வே எண். 3060/1 ல் உள்ள இடத்தில் 353 ச.மீ. பரப்பளவில் இடம் உள்ளது. மேற்படி இடத்தை பத்திரிகையாளர் மன்றத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவது குறித்து அரசின் அனுமதி பெற வேண்டியுள்ளது. எனவே தூத்துக்குடி பத்திரிக்கையாளர் மன்றம் சார்பில் வரப்பெற்ற விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.
</td>
<td>109)அலுவலக குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு –**மன்றத்தின் அனுமதி பெற்று அரசிற்கு கருத்துரு அனுப்பலாம்.<br><br>எப்1/16007/2009 | |
| | **17)**இம்மாநகராட்சி, வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் பம்பிங் செய்யப்படும் 700 மி.மீ.குழாய் மற்றும் 600, 500, 400 மி.மீ. தன்னோட்டக்குழாய்கள் தற்போது இருப்பு இல்லாததால் மேற்படி குழாய்களில் பழுது ஏற்படும் போது காலதாமதம் ஏற்படுகிறது. அதனை தவிர்க்க போதிய குழாய்களை இருப்பில் வைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 4,22,282/– செலவு செய்து மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம் மதிப்பீடு எண். 4/14–15 | 110) பதிவு செய்யப் பட்டது |
| | **18)**இம்மாநகராட்சி பகுதியில் தன்னிறைவுத்திட்டம் (2013–2014) கீழ் திரேசபுரத்தில் Rcc பாலம் கட்டும் பணிக்கு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அ2/4533/2014 நாள் 28–5–2014ன் படி ரூ. 30.00 லட்சம் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணிக்கு 16–7–2014 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தக்காரர்கள் (1) திரு. எஸ். ரம்போலா 2) திரு எஸ். சுதர்சன் ஆகியோரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அவற்றின் தொழில்நுட்ப ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதியுடையனவாக இருந்ததால் அவற்றின் விலைப்புள்ளிகள் 25–07–2014 அன்று திறக்கப்பட்டது. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல்<br><br>திரு எஸ். ரம்போலா ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டை விட 9.00 சதவிகிதம் அதிகம்<br>திரு.எஸ்.சுதர்சன் ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டை விட 13.15 சதவிகிதம் அதிகம்<br><br>பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ். ரம்போலா அவர்களிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டது. அவர் தனது 28.7.2014 கடிதம் மூலம் விலைக்குறைப்பு கொடுத்துள்ளார். அதனடிப்படையில் தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்குப் பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>மேற்படி பணி, திட்டப்பணியாக இருப்பதாலும் மேற்படி பணியின் மதிப்பீடு 2013–2014 ஆண்டின் விலைவிகிதம் தயார் செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டின் விலைவிகிதம் இதைவிட கூடுதலாக இருக்கும் என்பதாலும், பொறியியல் கையேடு எண்.2,7,2 ன் படி மேற்படி பணிக்கு திரு எஸ். ரம்போலா ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.99 சதவிகிதம் (2960724/–) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>மதிப்பீடு எண்.40/ 14–15 | 111) அலுவலக குறிப்புபடி அனுமதிக்க ப்பட்டது. |
| | **19)**தூத்துக்குடி மாநகராட்சியின், நான்கு கோட்டங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை பொது தனியார் கூட்டாண்மை PPP (Public Private Partnership) முறையில் பராமரிப்பு செய்யவும், மின் ஆற்றல் தணிக்கை செய்தல் மற்றும் புதியதாக தெருவிளக்குள் பொருத்தி பராமரிக்கும் பணிகளை பத்தாண்டுகளுக்கு மேற்கொள்ள அரசாணை எண். 88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.09.2012ல் தெரிவித்துள்ளபடியும், அரசாணை எண். 409 நிதி (ஊதியம்) துறை நாள் 26.11.2012ன் படி பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டப்பணிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு | 112)அலுவலக குறிப்பு 1,2,3 மற்றும் 4 அனுமதிக்கப்பட்டது |

விதிமுறைகளின் படியும் மற்றும் மாமன்றத் தீர்மானம் ஒப்புதல் அளித்துள்ளபடியும் இப்பணிக்கு தகுதி கோரிக்கை விண்ணப்பங்கள் (RFQ) 22.03.2013 லும் மற்றும் கருத்துரு கோரிக்கை (RFP) ஒப்பந்தப்புள்ளிகள் 17.06.2013 லும் கோரப்பட்டு RFP ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட மூன்று நிறுவனங்களில் அதிகபட்ச சேமிப்பு விலைவிகிதம் வழங்கி முதல் நிலை நிறுவனமாக பரிந்துரைக்கப்பட்டுள்ள (H1) மெசர்ஸ் Citelum India Private Ltd. New Delhi நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மாமன்றம் தீர்மானம் எண். 144 நாள் 29.08.2013 ஒப்புதல் வழங்கியுள்ளதன் பேரில் மெசர்ஸ் Citelum India Private Ltd. New Delhi நிறுவனத்தினருக்கு 04.09.2013ல் உத்தேசித்துள்ள கடிதம் (Letter of Intent) வழங்கப்பட்ட மேற்படி நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி கட்டுபாட்டுகளின்படி நான்கு கோட்டங்களில் உள்ள தெரு விளக்குகள் மற்றும் சுவிட்சுகளில் முதலீட்டு தர தணிக்கை (IGA) செய்யும் பணியை மேற்கொள்ளும் வகையில் மின்கம்பங்கள் மற்றும் சுவிட்சுகளில் எண்கள் இடுதல், மின்பளு கணக்கிடுதல், மின்விளக்குகளின் ஒளிரும் திறனை கண்டறிதல் இணையதளத்தில் தெருவிளக்குகளுக்கான வரைபடம் தயாரித்தல், மின்பயனீட்டு அளவை கணக்கிடுதல் மற்றும் கடந்த மூன்றாண்டுகளுக்கு தெருவிளக்குகளுக்கு செலுத்தப்பட்ட மின் கட்டண விபரங்களை சேகரித்தல் ஆகிய பணிகளை செய்து முடித்துள்ளது. அவற்றின் விபரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

அட்டவணை – 1
(தெருவிளக்குகளின் விபரம்)

| வ.எண். | தெருவிளக்கு விபரங்கள் | ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ள தெருவிளக்கு விபரங்கள் | முதலீட்டு தர தணிக்கை செய்யப்பட்ட பின்பு கண்டறியப்பட்ட தெருவிளக்கு விபரங்கள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 40 வாட்ஸ் குழல் விளக்கு | 14382 | 12798 |
| 2 | 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு | 0 | 57 |
| 3 | 150 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்கு | 0 | 4 |
| 4 | 250 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்கு | 1568 | 1329 |
| 5 | 400 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்கு | 158 | 56 |
| 6 | 250 வாட்ஸ் மெட்டல் ஹாலாய்டு விளக்கு | 0 | 106 |
| 7 | 250 வாட்ஸ் மெர்க்குரி ஆவிவிளக்கு | 74 | 16 |
| 8 | 400 வாட்ஸ் மெட்டல் ஹாலாய்டு | 0 | 166 |
| 9 | 1 X 36 C.F.L. விளக்கு | 0 | 61 |
| 10 | 2 X 36 C.F.L. விளக்கு | 0 | 102 |
| 11 | 1 X 45 C.F.L. விளக்கு | 0 | 19 |
| 12 | 1 X 65 C.F.L. விளக்கு | 0 | 202 |
| 13 | 4 X 24 T 5 விளக்கு | 100 | 77 |
| 14 | 2 X 24 T 5 விளக்கு | 0 | 2 |
| | மொத்தம் | 16282 | 14995 |

அட்டவணை – 2
(தெருவிளக்கு சுவிட்சுகளின் விபரம்

| வரிசை எண் | தெருவிளக்கு சுவிட்சுகளின் விவரங்கள் | முதலீட்டு தர தணிக்கை செய்யப்பட்ட பின்பு கண்டறியப்பட்ட தெருவிளக்கு சுவிட்சுகள் விபரங்கள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | ஒரு முனை மின் இணைப்பு | 668 |
| 2 | மும்முனை மின் இணைப்பு | 24 |
| | மொத்தம் | 692 |

மேற்கண்ட விவரப்படி மெசர்ஸ் Citelum India Private Ltd. New Delhi நிறுவனம் நான்கு கோட்டங்களிலும் உள்ள தெருவிளக்கு மற்றும் தெருவிளக்கு சுவிட்சுகளில் முதலீட்டு தர தணிக்கை செய்து (IGA) மின்னிணைப்பு வாரியாக ஒரு வருடத்திற்கான மின் பயனீட்டு அளவினை (Base Line) அடிப்படையாக கொண்டு முதலீட்டு தர தணிக்கை அறிக்கை சமா்ப்பித்துள்ளது. அதனை நகராட்சி நிா்வாகம் ஆணையரகத்தால் நியமனம் செய்யப்பட்ட மூன்றாம் நபா் ( M/s. TUV SUD South Asia, Chennai. Third Party Agency) நிறுவனத்தின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மூன்றாம் நபா் ஆய்வுப் பணி முடிக்கப்பட்டுள்ளது. Physical verification மற்றும் Base line ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி விதிகளின் படி முதலீட்டு தர தணிக்கை செய்யும் பணி முடிவுற்றவுடன் எல்.இ.டி. மின் விளக்குகள் மற்றும் மின்சக்தி சேமிப்பு உபகரணங்கள் பொருத்தப்பட வேண்டியுள்ளது.

அதன்படி மேற்கண்ட அட்டவணை (1) மற்றும் (2) கலம் எண் (4) கண்டுள்ள விபரப்படி நான்கு கோட்டங்கற்குட்பட்ட பகுதிகளில் உள்ள 4.40 வாட்ஸ் குழல் விளக்குகளை அகற்றிவிட்டு 15 வாட்ஸ் எல்.இ.டி. மின்விளக்குகளாக மாற்றியமைக்கவும் மற்றும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள CFL விளக்குகள் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் இல்லாததால் இதனை Un Classified Item ஆக கருதி 384 எண்களை 707 எண்கள் 15 வாட்ஸ் எல்.இ.டி. ஆக மாற்றி அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது மற்றும் தெருவிளக்கு சுவிட்சுகளில் மின்சக்தி சேமிப்பு உபகரணங்களை வழங்கி பொருத்தி இயக்கித்தருவதற்கு Citelum India Private Ltd. New Delhi நிறுவனம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரங்கள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

**அட்டவணை – 3**

(தெருவிளக்கு மின்சக்தி சேமிப்பு உபகரணங்களின் விலை விபரம்)

மேற்கண்ட அட்டவணைப்படி 15 வாட்ஸ் எல்.இ.டி. மின்விளக்குகளாக மாற்றியமைக்கவும் மற்றும் மின்சக்தி சேமிப்பு உபகரணங்கள் வழங்கி பொருத்தி இயக்கித்தருவதற்கு ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகின்றது.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளியின் படி ஒ விலை (ரூபாயில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 4’–40 வாட்ஸ் குழல் விளக்குகளை அகற்றிவிட்டு ஒப்பந்தப்புள்ளி கட்டுபாடுகள் விதி எண். 8ன் படி மின்சக்தி சேமிப்புத் திறன் கொண்ட 15 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகளாக மாற்றுதல் | 13507 | 6900.00 |
| 2 | Cabinet controller | 678 | 50000.00 |
| 3 | Voltage Variator | 14 | 15000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | Pack Web | 1 | 2000000.00 | |
| 5 | தனிப்பட்ட தெருவிளக்கு கண்காணிப்பு சாதனம் (Individual Lamp Monitoring Device) | 748 | 13000.00 | |
| 6 | இணையதள கண்காணிப்பு மையம் அமைப்பதற்கான செலவினம் (Centralized monitoring station) | 1 | 13072200.00 | |
| | மொத்தம் | | 152104500.00 | |

**அட்டவணை – 4**

எல்.இ.டி. மின்விளக்குகள் மற்றும் மின்சக்தி சேமிப்பு உபகரணங்கள் பொருத்த ஆகும் கால அவகாசம் ஒப்பந்த விதிகளின் படி 10 மாதங்கள் ஆகும். அது வரை இந்நிறுவனம் மூலம் தெருவிளக்குகளை இயக்கி மற்றும் பராமரிக்க வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிற

| வ.எண். | தெருவிளக்குகளின் வகைகள் | எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளியின் படி ஓராண்டிற்கு பராமரிப்பு தொகை (ரூபாயில்) விலை ஒன்றுக்கு |
|---|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் குழல் விளக்கு | 13507 | 362.00 |
| 2 | சோடியம் ஆவிவிளக்கு 70 வாட்ஸ் / 150 வாட்ஸ் .250 வாட்ஸ் | 1390 | 470.00 |
| 3 | 250 வாட்ட்ஸ மெட்டல் ஹாலாய்டு/ மெர்குரி ஆவிவிளக்கு | 122 | 475.00 |
| 4 | T54 X 24 / 2 X 24 T5 | 79 | 475.00 |
| 5 | உயர் கோபுர மின்விளக்கு (400 வாட்ஸ் SVL/400 வாட்ஸ் MHL | 222 | 555.00 |
| 6 | எதிர்பாராத உத்தேச செலவினம் | | 738481.00 |
| | மொத்தம் | | 6500000.00 |

**அட்டவணை எண். 5**

எல்.இ.டி. மின்விளக்குள் மற்றும் மின்சக்தி சேமிப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்ட பின்பு முதல் மற்றும் இரண்டாம் ஆண்டிற்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளி விலை விபரம் கீழ்காணும் விவரப்படி தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண். | தெருவிளக்குகளின் வகைகள் | எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளியின் படி ஓராண்டிற்கு பராமரிப்பு தொகை (ரூபாயில்) விலை ஒன்றுக்கு |
|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | மின்சக்தி சேமிப்பு திறன் கொண்ட 15 வாட்ஸ் எல்.இ.டி. மின்விளக்குகள் | 13507 | 350.00 | |
| 2 | Cabinet Controller | 678 | 190.00 | |
| 3 | Voltage Variator | 14 | 200.00 | |
| 4 | Pack Web | 1 | 134260.00 | |
| 5 | தனிபட்ட தெருவிளக்கு கண்காணிப்பு சாதனம் (Individual Lam monitoring Device) | 748 | 145.00 | |
| 6 | இணையதள கண்காணிப்பு மையம் அமைப்பதற்கான செலவினம் (Centralized Monitoring Station) | 1 | 195000.00 | |
| 7 | சோடியம் ஆவிவிளக்கு 70 வாட்ஸ்/150 வாட்ஸ்/250 வாட்ஸ் | 1390 | 250.00 | |
| 8 | 250 வாட்ஸ் மெர்க்குரி ஆவிவிளக்கு / 250 வாட்ஸ் மெட்டல் ஹாலாய்டு | 122 | 250.00 | |
| 9 | 4X 24 T5/2 X 24 T5 | 79 | 230.00 | |
| 10 | உயர் கோபுர மின்விளக்கு (400 வாட்ஸ் SVL /400 வாட்ஸ் MHL ) | 222 | 250.00 | |
| | மொத்தம் | | 5748460.00 | |

மேற்கண்டவாறு எல்.இ.டி. மின்விளக்குகள் மற்றும் மின்சக்தி சேமிப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்ட பின்பு தெருவிளக்குகளை பராமரிக்க முதல் இரணடு ஆண்டிற்கு உத்தேசமாக ரூ 11496920.00 செலவாகும். ஒப்பந்தப்புள்ளி விதிகளின் படி மூன்றாம் ஆண்டு முதல் 10ஆம் ஆண்டு வரை பராமரிப்பு தொகையில் ஒவ்வொரு ஆண்டிற்கும் 8 சதவீதம் உயர்த்தி வழங்க மாமன்ற தீர்மானம் எண். 169 நாள் 18.07.2013ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

**அட்டவணை – 6**

மேற்படி நிறுவனம் தெருவிளக்குகளை 10 ஆண்டு காலத்திற்குள் இயக்கி, பராமரிக்கும்போது மற்றும் புதிதாக பொருத்தப்பட வேண்டிய நிலையிலும் தேவைப்படும் புதை மின்வடங்கள் மற்றும் மின் உபகரணங்கள் அகியவற்றிற்கான விலை விகிதம் கீழ்காணும் வகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின்வடங்கள் மற்றும் மின் உபகரணங்களின் வகைகள் | எண்ணிக்கை | விலை ஒன்று (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | Supply and erction of 2 X 10 sq.mm.UG cable per running meter | 1 | 200 |
| 2 | 4X10 sq.mm | 1 | 250 |
| 3 | 4x16 sq.mm. | 1 | 300 |
| 4 | 4x25 sq.mm. | 1 | 350 |
| 5 | 4x35sq.mm | 1 | 375 |
| 6 | Erection of switch box with fuse | 1 | 35000.00 |
| 7 | ¾ G.I. Bend pipe, 1.2 M length with 2sets M.S. Clampset | 1 | 450.00 |
| 8 | Supply & erection of 7m Tubular Pole with Bracket & Accessories | 1 | 18795.00 |
| 9 | Supply & erection of 9m Tubular Pole with Bracket & Accessories | 1 | 24570.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | Supply & fixing of SVL /MHL 70w | 1 | 3885.00 | |
| 11 | Supply & fixing of SVL /MHL 150w | 1 | 7350.00 | |
| 12 | Supply & fixing of SVL /MHL 250w | 1 | 10500.00 | |
| 13 | Supply & fixing of SVL /MHL 1 X 400w | 1 | 12589.00 | |
| 14 | Supply & fixing of SVL /MHL 2 X 400w | 1 | 18889.00 | |
| 15 | Supply & Erection of 12.5m high mast with accessories | 1 | 525000.00 | |
| 16 | Supply & Erection of 16m high mast with accessories | 1 | 630000.00 | |
| 17 | Supply & Erection of 20m high mast with accessories | 1 | 735000.00 | |
| 18 | Supply & Erection of 25m high mast with accessories | 1 | 840000.00 | |
| 19 | Supply & Erection of 30m high mast with accessories | 1 | 976500.00 | |
| 20 | Removal of existing damage pole | 1 | 2100.00 | |
| 21 | 250W design lamp fitting | 1 | 35700.00 | |
| 22 | 27 LED decorative fitting | 1 | 47250.00 | |
| 23 | Decorative pole 3m /4m | 1 | 17850.00 | |
| 24 | 2x400 W flood light fitting | 1 | 12600.00 | |
| 25 | 2x400 W control Cable box | 1 | 23100.00 | |
| 26 | Brika /16LED/27W | 1 | 11550.00 | |
| 27 | Brika/24LED/42W | 1 | 16537.00 | |
| 28 | Teceo 1/48LED/78W | 1 | 48825.00 | |
| 29 | Hapiled / 16 LED/27W | 1 | 47250.00 | |
| 30 | Sepale /NB/150/1399 | 1 | 32025.00 | |
| 31 | Sepale/NB/150 | 1 | 33600.00 | |
| 32 | Amber 3/NM/150/ | 1 | 19188.00 | |
| 33 | Amber 3/NM/250 | 1 | 19674.00 | |
| 34 | Amber 3/NB/400/ | 1 | 20648.00 | |
| 35 | RT3/n/250/83 with non intergral control gear | 1 | 11810.00 | |
| 36 | RT3/n/400/83 with non intergral control gear | 1 | 12783.00 | |
| 37 | RT3/N/2x250/83 WITH NON INTERGRAL CONTROL GEAR | 1 | 17561.00 | |
| 38 | RT3/N/2x400/83 WITH NON INTERGRAL CONTROL GEAR | 1 | 18112.00 | |

பராமரிப்பின் தொகைகள் ஒவ்வொரு ஆண்டும் இணையும் விளக்குகளின் எண்ணிக்கை கொண்டு RFP யின் விலை விபரப்படி மாறுபடும். புதிய விளக்குகளை RFP யின் அளிக்கப்பட்ட விலை விகிதப்படி ஒவ்வொரு ஆண்டுக்கும் அமைக்கலாம். முதல் 10 மாதத்திற்குள் தற்போது உள்ள விளக்குகளை பராமரித்தும் மின் சாதனங்களை பொருத்திக் கொண்டும் முடிவு அறிக்கையினை சமர்ப்பித்தும் III rd Party நிறுவனத்தால் தணிக்கை செய்து உறுதி செய்யப்பட்டு அதன் பின் 10 ஆண்டுகள் தொடர் பராமரிப்பினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் மின் வாரியத்தால் கம்பம் மாற்றி அமைக்கப்பட்டு பொருத்தாமல் விடுபட்டுள்ள மின் விளக்குகளை இணைக்க வேண்டியுள்ளது. மேலும் இந்நிறுவனம் சமர்ப்பித்துள்ள முதலீட்டு தர தணிக்கை விபரங்களை மூன்றாம் நபர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் மேற்படி மூன்றாம் நபர் நிறுவனம் (Third Party Agency) ஆய்வு செய்து பரிந்துரைக்கப்படும் ஓராண்டுக்கான மின் பயனீட்டு அளவினை அடிப்படையாக கொண்டு மெசர்ஸ் Citelum India Private Ltd. New Delhi நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள படி 48 சதவீதத்திற்கு குறையாமல் ஒவ்வொரு ஆண்டிற்கும் மின் சக்தி சேமிப்பு மற்றும் 15 சதவீதம் பராமரிப்பு சேமிப்பும் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்ய பொருள் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு**<br><br>1. அட்டவணை – (3) , (4) , (5) மற்றும் (6)ல் கண்டுள்ளபடி மெசர்ஸ் Citelum India Private Ltd. New Delhi நிறுவனம் வழங்கியுள்ள விலை விகிதங்களை ஏற்று மாமன்றம் ஒப்புதல் வழங்கி உள்ளதை அனுமதிக்கலாம்.<br>2. மூன்றாம் நபர் நிறுவனம் பரிந்துரைக்கும் ஓராண்டு மின்பயனீட்டு அளவின் அடிப்படையில் (Base Line for KWh-year) 48 சதவீதத்திற்கு குறையாமல் மின்சக்தி சேமிப்பு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இந்நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி ஒப்பந்தம் செய்து கொள்வது குறித்து மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>3. புதியதாக அமையும் விளக்குகளுக்கு ஏற்ப ஒவ்வொரு ஆண்டுக்கும் மின் கட்டணம் மற்றும் பராமரிப்பினை மேற்படி சேமிப்பு விகிதத்தில் கணக்கீடு செய்து இப்பணியினை மேற்கொள்ளவும் செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். கணக்கிட்டு பணிகளின் போது மின் வாரியத்தால் மாற்றி அமைக்கப்பட்டுள்ள மின்கம்பங்களில் விடுபட்டுள்ள மின் விளக்குகளை இணைத்து பராமரிக்கவும் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள CFL விளக்குகளை LED ஆக மாற்றிக் கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>4. ஒவ்வொரு ஆண்டிற்கும் தெருவிளக்குகள் பராமரிப்பதற்கு ஆகும் செலவினத்தை அந்தந்த ஆண்டு வரவு செலவு திட்டம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம். ந.க.எண்.இ3/6748/2012 | |
| | 20)தூத்துக்குடி மாநகராட்சி மீளவிட்டான் கிராமம் தூத்துக்குடி மதுரை புறவழி சாலை புல எண்கள் 1512/2எ1 1512/2A2A யில் அமையும் மனையில் தரை , தரை கீழ் தளம் முதல் தளம் கொண்ட அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு திட்ட அனுமதி வேண்டி, செயலாளர் இந்தியன் சேம்பர் ஆப் காமஸ் இண்டஸ்ட்ரிஸ் அவர்கள் தூத்துக்குடி உள்ளூர் திட்ட குழுமத்திற்கு மனு செய்துள்ளார்.<br><br>தூத்துக்குடி உள்ளூர் திட்ட குழுமத்தில் செயலாளர் இந்தியன் சேம்பர் ஆப் காமஸ் இண்டஸ்ரீஸ் அவர்களுக்கு சொந்தமான மனையில் கட்டிடம் கட்ட திட்ட அனுமதி வழங்க தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனையில் கட்டிடம் கட்ட திட்ட அனுமதி வழங்குவது ஏதுவாக 10 சதவிகிதம் பொது ஒதுக்கீடு பகுதியினை உறுப்பினர் செயலர் உள்ளூர் திட்ட குழுமம் தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண். 1338/13 தூ.உ.தி.கு. நாள் 6.2.14ம் தேதிய கடிதத்தில் தூத்துக்குடி மாநகராட்சியில் ஒப்படைப்பு செய்த விபரத்தினை தெரிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.<br><br>தூத்துக்குடி மாநகராட்சி மீளவிட்டான் கிராமம் தூத்துக்குடி மதுரை புறவழி சாலை புல எண்கள் 1512/2எ1 1512/2எ 2எ இடத்திற்கு திட்ட அனுமதி வழங்க ஏதுவாக மனுதாரர் சமர்ப்பித்துள்ள வரைபடத்தின்படி பொது ஒதுக்கீடு பகுதி 10 சதவிகிதம் (open space Reservation) மனையை பரப்பளவு 425 ச.மீ. (10.50 சென்ட்) பகுதியினை தூத்துக்குடி மாநகராட்சிக்கு பதிவு செய்யப்பட்ட தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்ய அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ளார்.<br><br>மாநகராட்சி பராமரிப்பிற்கு ஆணையர் தூத்துக்குடி மாநகராட்சி பெயரில் பதிவு செய்யப்பட்ட தான பத்திரம் மூலம் பெற்றுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப் 1 /4897 /2014 | 113)அலுவலக குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 21)அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அவர்களின் 22–05–2014 ஆம் தேதிய கூட்ட நடவடிக்கைகளில் மாநகராட்சி பகுதிகளில் உள்ள குளம், குட்டை, ஊரணி போன்ற இடங்களை தூர்வாரி மழை காலங்களில் மேற்படி பகுதியில் மழை நீரை சேகரித்து சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீரை மேம்படுத்திடவும் ஊரணியில் தேக்கியுள்ள நீரினை குடிநீர் உபயோகத்திற்கு பயன்படுத்தும் வகையில் மழைநீரினை சேமிக்கவும் அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள ஊரணிகளை தூர்வாரி அதனை பாதுகாக்கும் பொருட்டு புதுப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே இம்மாநகராட்சி பகுதியில் உள்ள முள்ளிகுளம் மற்றும் பண்டாரம்பட்டி ஊரணிகளை உபயோகிக்க முடியாத பழைய நிலையில் உள்ளதை புதுப்பித்து ஊரணியை சுற்றி சுவர் எழுப்பி படித்தளம் அமைத்து மழைநீரை சேமிக்கும் வகை செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மூலம் , மெசர்ஸ் . இன்மாஸ் நிறுவனத்தால் தயார் செய்யப்பட்ட ரூ 88.93 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கையினை மாமன்றம் ஒப்புதல் செய்யலாம்.<br><br>மேலும் மேற்கண்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஏற்படும் செலவினத்தை உலக வங்கி நிதி ஆதார அமைப்பான தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி ஆதார திட்டத்தின் (TNSUDP) நிதியில் கடன் பெற்று செயல்படுத்திடவும், மேற்கண்ட திட்டத்திற்கான முன்மொழிவுகள் மற்றும் கடன் ஒப்பந்தப்பத்திரத்தில் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் கையொப்பம் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் மூலம் நிர்வாக அனுமதி பெற அரசுக்கு பரிந்துரை செய்யவும் மாமன்றத்துற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1) மேற்கண்ட திட்ட மதிப்பீடு தொகை ரூ. 88.93 இலட்சத்திற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2) மேற்கண்ட திட்டத்தினை உலக வங்கி நிதி ஆதார அமைப்பான தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி ஆதார திட்டத்தின் (TNSUDP) நிதியில் கடன் பெற்று செயல்படுத்திட மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>3) மேற்கண்ட திட்டத்திற்கான முன்மொழிவுகள் மற்றும் கடன் ஒப்பந்த பத்திரத்தில் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் கையொப்பம் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மூலம் அரசுக்கு பரிந்துரை செய்து நிர்வாக அனுமதி பெற மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/8325/2014 | 114) அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்க ப்பட்டது |
| | 22)தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் அகற்றும் பணிக்கு மாநகராட்சி கழிவுநீர் வாகனம் பயன்படுத்தி அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இரண்டு எண்ணம் கழிவுநீர் லாரிகள் மட்டும் உள்ளது. மற்றொரு வாகனம் வாங்கி 16 ஆண்டுகள் ஆகிவிட்டபடியால் வாகனம் ஓட்டைவிழுந்து நிறைய தேய்மானம் அடைந்து உள்ளது. மேற்கண்ட வாகனம் மூலம் கழிவுநீரை அப்புறப்படுத்த முடியவில்லை. எனவே புதியதாக இரண்டு எண்ணம் கழிவுநீர் வாகனங்கள் வாங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட இரண்டு எண்ணம் 100000லிட்டர் கொள்ளளவு கொண்ட வாகனங்கள் வாங்குவதற்கு உத்தேசமாக ரூ 40.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>மாமன்றம் அனுமதிக்கலாம், ஏற்கனவே உள்ள பழைய வாகனங்களை கழிவு நீக்கம் (Condement) செய்யலாம். இ3/8250/14 | 115) அலுவலக குறிப்பு படி அனுமதிக்க ப்பட்டது |
| | 23)இம்மாநகராட்சியில் பிரிக்கப்பட்டுள்ள நான்கு மண்டலங்களும் பொது மக்கள் நலனுக்காக தனித்தனி அலுவலகமாக செயல்பட உதவி ஆணையர் (பொ) மற்றும் ஊழியர்கள் நியமனம் | 116) அலுவலக |

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.<br><br>தற்போது அந்தப்பகுதியில் உள்ள பொதுமக்கள் தொடர்பான கோரிக்கைகளை துரிதமாக செயல்படுத்த உதவி ஆணையர் (பொ) அவர்களுக்கு வாகன வசதி ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. தற்போது மாநகராட்சியில் போதிய வாகனங்கள் இல்லாததால் தனியார் வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்று வழங்குவதற்கும் அதற்குரிய உத்தேச செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம். இ5/8630/2014 | குறிப்பு படி அனுமதிக்க ப்பட்டது |
| | 24)இம்மாநகராட்சி பகுதியில் வார்டு எண். 40, 41 மற்றும் 12ம் வார்டில் பகுதி 21 வார்டில் பகுதி 24ம் வார்டில் பகுதி மற்றும் 26ம் வார்டில் பகுதி ஆகிய வார்டுகளில் குப்பை அள்ளும் பணி M/S Our Land Engineering works நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.<br><br>மாமன்ற தீர்மானம் எண். 17 நாள் 22.1.2014ன் படி மேற்படி பணி 18.4.2014ல் முடிவடைந்துள்ளதால், புதிதாக குப்பை அள்ளும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்நிலையில் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றதால், தேர்தல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு ஒப்பந்ததாரரை முடிவு செய்ய கால அவகாசம் தேவைப்பட்டது. மேற்படி வார்டுகளில் குப்பை அள்ளும் பணி M/S Our Land Engineering works நிறுவனத்திற்கு மாமன்ற தீர்மானம் எண். 60 நாள் 27.6.2014ன் படி 19.4.2014 முதல் 31.7.2014 வரை கால நீடிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டது.<br><br>தற்போது வரை வார்டு எண். 40, 41 மற்றும் 12ம் வார்டில் பகுதி 21 வார்டில் பகுதி 24ம் வார்டில் பகுதி மற்றும் 26ம் வார்டில் பகுதி ஆகிய வார்டுகளில் குப்பை அள்ளும் பணிக்கு ஒப்பந்ததாரை முடிவு செய்து பணி உத்திரவு வழங்கப்படாமல் உள்ளதால், மாநகர சுகாதாரத்தை பேணும்பொருட்டும், அதன் அவசியத்தை கருத்தில் கொண்டும், 01.08.2014 முதல் 31.8.2014 வரையிலான கால கட்டத்தில் மேற்படி வார்டுகளில் துப்புரவுப் பணி மேற்கொள்ள தற்போது துப்புரவு பணி மேற்கொண்டு வரும் M/S Our Land Engineering works நிறுவனத்திற்கு அதே பழைய விலை விகிதத்தில் குப்பை அள்ளும் பணிக்கு டன் ஒன்றுக்கு ரூ 1,047/– வீதமும் வடிகால் மண் அகற்ற நடை ஒன்றுக்கு ரூ 517/– வீதம் வழங்கவும் மேற்படி பணியை தொடர்ந்து செய்யவும் அதற்கு ஆகும் கூடுதல் செலவு தொகைக்கும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு–** அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி 31. 8.2014 வரை பணி செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எச்1/8596/2014 | 117) அலுவலக குறிப்பு படி அனுமதிக்க ப்பட்டது |
| | 25)இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு வார்டு எண்.1, 2, 3, 5, 17, 18, 48, 49, 50 ஆகிய பகுதிகளுக்கு தனியார் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் ரூ.20.00 இலட்சத்திற்கு இம்மாமன்ற தீர்மான எண்.59 நாள்.27.06.2014ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக 30.09.2014 வரை குடிநீர் விநியோகம் செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளதால் அதற்கான செலவினத்தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு–** தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக தனியார் லாரி மூலம் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ 20.00 இலட்சம் செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணிகளை தற்போது கவனித்து வரும் ஒப்பந்ததாரரால் தொடர்ந்து லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய அனுமதிக்கலாம். | 118) அலுவலக குறிப்பு படி அனுமதிக்க ப்பட்டது |

| | | |
|---|---|---|
| | | |
| | | 119) தற்போது பெற் தொடர் கனமழையின் காரணமாக சேதமடைந்த சாலைகள் போர்க்கால அடிக்கடையில் செப்பனிட உத்திரவு பிறப்பித்த தமிழக அரசுக்கு இம்மாமன்றம் தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது. |

மாமன்றம், தூத்துக்குடி
நாள் : .2014

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி